1981 மார்ச் 31]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பேருந்துகளிலே அந்தச் சலுகையை வழங்கிக் கொண்டிருக்கிறோம். தனியார் பேருந்துகளில் அவர்கள் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அங்கு கூட முடியுமா என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு எல்லாம் 1/2 கட்டணம் வசூலிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டும்தான் 1/2 கட்டணம். அதற்குக் கீழே உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் இல்லை. அதற்கு மேலே உள்ள குழந்தைகள், 12 வயதிற்குள் நிச்சயமாகப் பள்ளிக்கூடம் போய்க் கொண்டுதான் இருக்கும். அவர்களுக்கு இந்தச் சலுகை பொருந்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது போல் நிருபர்களுக்கு பாஸ் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கனவே கொடுத்தாகி விட்டது. காலதாமதமாகக் கேட்கிறீர்கள், பத்திரிகையிலே வராது.

தலை பாதுகாப்பு கவசம் அணிதல்.

*வினா எண். 575—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் கட்டாயமாக ' தலை பாதுகாப்பு கவசம் ' (Helm-t) அணியவேண்டும் என்ற உத்தரவை கட்டாயமாக்க அரசு ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மத்திய அரசு, 1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தில் சேர்க்கப்பட்ட புதிய பிரிவு 85-ன்படி ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுநர், பின்னால் அமர்ந்து செல்பவர்கள் கட்டாயமாகத் தலைக் கவசம் அணிய வேண்டும் என்று உத்திரவிட்டது. இது 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் அமுலுக்கு வரும் என்று சொன்னார்கள். அதற்குப் பின்பு அந்த உத்தரவு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 மார்ச் 31

திரு. செ. செம்மலை: : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் விபத்துக்கு ஆளாகும்போது, பெரும்பாலும் தலையில் சேதம் ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. எனவே அதைத் தவிர்க்கிற நிலையிலே மத்திய சர்க்கார் அந்த உத்தரவை வற்புறுத்த வில்லையென்றாலும், மாநில சர்க்காரே தன்னுடைய சட்டத்திற்கு உட்பட்டு, அந்த நிலையை வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தலைக் கவசம் அணிந்து செல்வதுதான் ஆபத்தைத் தவிர்க்கக் கூடியது என்று அந்த ஓட்டுநர்களுக்குத் தெரிந்திருந்தும் கூட அவர்கள் அதை நடைமுறையிலே கொண்டு வராதது வருந்தத்தக்கது ஆகும். இருந்தாலும்கூட, அந்த ஆபத்துக்களைக் குறைக்கின்ற அளவுக்கு, மத்திய அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்றாலும், மாநில அரசே அதை செய்ய முடியுமா என்று பார்த்து, எதிர் காலத்திலே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களை ஓட்டுபவர்கள் கட்டாயமாகத் தலைப் பாதுகாப்புக் கவசம் 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் அணிய வேண்டுமென்று மத்திய அரசு அறிவித்து விட்டு, திருப்பி, 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி முதல் தலைக் கவசம் அணிய வேண்டாம் எனச் சொல்லப்பட்டதற்கு ஏதாவது காரணங்கள் சொல்லப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே அதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. அந்த உத்தரவு போடப்பட்டது. பிறகு திரும்பப் பெறப்பட்டது என்ன காரணம் என்று தெரியவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலைக் கவசம் அணிய வேண்டுமென அரசு உத்தேசித்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்சமயம் ஒரு மோட்டார் பைக்கில் 3, 4 பேர் குழந்தைகளோடு குடும்பத்தோடு போகிறார்கள். பின்னாலே, அவருடைய மனைவிமார்களையும் அழைத்துச் செல்கிறார்கள். அவர்களும் கவசம் அணிய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி; மோட்டார் சைக்கிள் பின்னாலே எத்தனையோ பேர்களை ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். மனைவிமார்கள் என்று சொல்லும்போது, 2 பேருக்கு மேல், 3 பேர், 4 பேர்களை.

ஏற்றிச் செல்கிறார்கள் என்ற பொருள் வரும். அந்த வாகனத்தில் இரண்டு பேர்தான் செல்ல வேண்டும். அந்த இரண்டு பேரும் தலைக் கவசம் அணிய வேண்டுமென்பதைப் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம்.

பார்வை இழந்தோருக்கு இலவசப் பயணச்சீட்டு சலுகை

*வினா எண். 576—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்பார்வை இழந்தோருக்கு மாதம் இரு முறை சிகிச்சைக்கு செல்வதற்காக இலவசப் பயணச் சீட்டு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்பட்டு வந்தது இன்னும் அளிக்கப்படுகிறதா ?

(ஆ) அத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) ஆம்.

(ஆ) கண் பார்வையற்றவர்கள் மருத்துவமனை/வேலை செய்யுமிடம்/கல்விக்கூடம் முதலிய இடங்களுக்கு தங்கள் இல்லங்களிலிருந்து பேருந்துகளில் இலவசமாக சென்று வர இலவச பாஸ் கொடுக்கப்படுகிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைத் தவிர ஏனைய போக்குவரத்துக் கழகங்களில் வழங்கப்படுகின்றன.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த இலவச பஸ் வசதி எத்தனை பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கண்பார்வை அற்றவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய ஊனமுற்றோர்களுக்கு இந்த வசதி நீட்டிக்கப்படுமா என்பதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: : தலைவர் அவர்களே, இதுவரையில் 1,044 பேர்களுக்கு இப்படிப்பட்ட பாஸ் வழங்கப்படுகிறது. இன்னும் உள்ள ஊனமுற்றோர்களுக்கு அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். இது ஊனமுற்றோர் ஆண்டாக இருப்பதால் மற்ற ஊனமுற்றோர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுமா என்பது பற்றி பின்புதான் அரசு முடிவெடுக்கும்.